**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2026-ம் வருடம் பிப்ரவரி மாதம் 13-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**(2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 01-ம் நாள்)**

**இ.ம.எண்.9/2026 in இ.ம.எண்.7/2025**

**அசல் வழக்கு எண்.165/2007**

1. குருசுவாமி
2. குருபதசுவாமி ...... மனுதாரர்கள் / வாதிகள்

/எதிர்/

1. முத்தம்மாள் (இறப்பு)
2. பேரானந்தம்
3. நாரயணயசாமி (Exonerated)
4. ஜெயம்மாள் (இறப்பு)
5. புஷ்பா
6. மகேஷ்
7. அஜீத்
8. உஷா
9. மைனர்.வீரபத்திரசாமி
10. மைனர். வினாய்

(9 மற்றும் 10 மைனர்களுக்கு கார்டியனாக 8-ம் எதிர்மனுதாரர் )

........ எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

11. மகேஷ்வரி
12. ராணி ........ எதிர்மனுதாரர்கள் / 11 முதல் 12 உத்தேசக்கட்சிக்காரர்கள்

இம்மனுவானது கடந்த 11.02.2026 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. இராஜாமணி அவர்கள் ஆஜராகியும், 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.A.முகமதுமுபாரக் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 8-ம் எதிர்மனுதாரர்கள்

ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1, 4-ம் எதிர்மனுதாரர்கள் காலம்சென்றுவிட்டதாலும், 9, 10-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில், நீதிமன்ற காப்பாளர் திரு.C.K.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.,

உத்தரவு

இம்மனு காலவரையறை சட்டம் பிரிவு 5ன் படி, அசல் மனுவில் 4-ம் எதிர்மனுதாரர் வாரிசுகளை சேர்க்க ஏற்பட்ட அபேட்மன்டை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 778 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டு உத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தினைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், விளம்புகை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இந்நிலையில், 1-ம் பிரதிவாதி காலமாகிவிட்டார். 1-ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்க வேண்டி இ.ம.எண்.1/2022 மனுதாக்கல் செய்யப்பட்டு, கடந்த 03.04.2025-ல் அனுமதிக்கப்பட்டது. அதன்படி வழக்கில் திருத்தம் செய்ய வேண்டி இ.ம.எண்.6/2025 மனுதாக்கல் செய்து நிலுவையில் இருந்தபோது, மேற்படி மனுவில் 3 மற்றும் 4-ம் எதிர்மனுதாரர்கள் காலம்சென்றுவிட்டதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. இந்நிலையில் 3-ம் எதிர்மனுதாரர் வழக்கிலிருந்து Exonerated செய்யப்பட்டுள்ளார். 4-ம் எதிர்மனுதாரருக்கு மனுவில் கண்ட 11 மற்றும் 12 உத்தேசக்கட்சிக்காரர்கள்தான் வாரிசுகள் ஆவார்கள். இந்நிலையில், 4-ம் எதிர்மனுதாரரின் வாரிசுதாரர்கள் விவரம் தெரியாமல் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக வழக்கில் வாரிசுகள் சேர்க்க வேண்டி மனுசெய்ய இயலவில்லை. வழக்கானது அபேட்மெண்ட் ஆகிவிட்டது. எனவே, அசல் வழக்கில் 4-ம் எதிர்மனுதாரர் வாரிசுகளை சேர்க்க ஏற்பட்ட அபேட்மன்டை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 778 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டு உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரரின் மனு மோசடியானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. காலம்சென்ற 3-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்க்காமல் Exonerated செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும், 2-ம் எதிர்மனுதாரருக்கு

எவ்வித அறிவிப்பும் கொடுக்கவில்லை. மேலும், 4-ம் எதிர்மனுதாரர் இறந்த விவரம் மனுதாரர்களுக்கு நன்கு தெரியும். 4-ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களின் நெருங்கிய உறவினர். 3-ம் எதிர்மனுதாரர் வழக்கில் தன்னை கட்சிக்காரராக சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதன் பேரில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது சரிதான் என தீர்ப்பு ஏற்பட்டது. அதன்படி 3-ம் எதிர்மனுதாரர் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார். எனவே, 3-ம் எதிர்மனுதாரரை வழக்கில் இருந்து Exonerated செய்திருப்பது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. 1-ம் எதிர்மனுதாரர் முத்தம்மாள் காலமானபின்பு அவரது வாரிசுகளை வழக்கில் சேர்க்க நடவடிக்கை எடுத்தபோதும், முத்தம்மாளின் மற்ற வாரிசுகளை சேர்க்கவில்லை என்று எதிர்வாதம் செய்தபோது முத்தம்மாளின் மகன் நாகராஜ் காலமானதால், முத்தம்மளின் மற்றொரு வாரிசான காலஞ்சென்ற உமாபதியின் வாரிசான வீரபத்திரசாமி மற்றும் வினை ஆகியோர்கள் வாரிசாக சேர்க்கவில்லை என இ.ம.எண்.1/2022 மனுவின் எதிர் உரையில் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி எதிர்உரையின் படி மனுதாரர்கள் மேற்படி வாரிசுகளை வழக்கில் சேர்த்துள்ளார். ஆனால், மேற்படி உமாபதியின் மனைவி உஷா என்பவரை மனுவில் சேர்க்கப்படவில்லை. தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் உஷா என்பவரை 8-ம் எதிர்மனுதாரராக கட்சி சேர்த்துள்ளார்கள். தனியான மனு தாக்கல் செய்யப்படவில்லை. இ.ம.எண்.1/2022-ன்எதிர்உரை கடந்த 28.07.2022-ல் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், முத்தம்மாளின் வாரிசுகளை சேர்க்க 12.01.2026-ல் மனு தாக்கல் செய்துள்ளார்கள். மனு செய்ய ஏற்பட்ட காலதாமதம் 1263 நாட்கள் ஆகும். மனுதாரர்கள் தரப்பில் 778 நாட்கள் காலதாமதத்திற்கு மனு செய்திருப்பது சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் இறந்த விவரம் நன்கு மனுதாரருக்கு நன்கு தெரியும். 1-ம் எதிர்மனுதாரர் இறந்த தேதி தெரியாமல் இருந்தாலும், தகவல் தெரிந்த தேதியான 24.06.2022-முதல் தற்போது மனு தேதியான 12.01.2026 வரை கணக்கிட்டால் 3 வருடம் 6 மாதம் 18 நாட்கள் மொத்தம் 1263 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, மனுவானது காலவரையறை சட்டத்தினால் (Barred by limitation) பாதிக்கப்பட்டுள்ளது. 8-ம் எதிர்மனுதாரராக உஷா என்பவரை இவ்வழக்கில், இம்மனுவில் 8-ம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டார் என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை. 4-ம் எதிர்மனுதாரரான ஜெயம்மாள் இறப்பைப்பற்றி தெரியாது என்றும், வாரிசுகள் விவரம் தெரியாது என்றும் கூறுவது பொய்யாகும். காலதாமதத்திற்கு சரியான காரணங்களை கூறி தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே மனுவை செலலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில், சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு**

**6.1** இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கு 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 1-ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி காலமாகிவிட்டதால் அவரது வாரிசுகளை கட்சி சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டு, இ.ம.எண்.1/2022 கடந்த 03.04.2025-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தாவாவை திருத்தம் செய்ய இ.ம.எண்.6/2025-ல் மனு தாக்கல் செய்த சமயத்தில் இவ்வழக்கில் 3, 4 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்டதாக எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்ததன் அடிப்படையில் 1-ம் பிரதிவாதியின் வாரிசான 4-ம் எதிர்மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளான 11, 12 வாரிசுகளை அசல்வழக்கில் தரப்பினராக சேர்ப்பதில் ஏற்பட்ட 778 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை ஏற்க வேண்டியும், மேலும் 3-ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கில் பரிகாரம் எதுவும் கோராததால், 3-ம் எதிர்மனுதாரரை வழக்கிலிருந்து நீக்கம் (Exonerated) செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, 3-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லாததால் அவரது வாரிசுகளை சேர்க்கப்படவில்லை என மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.

**6.2** இந்நிலையில், எதிர்மனுதாரர்கள் தரப்பில் 3-ம் எதிர்மனுதாரரான நாரயணயசாமியை இவ்வழக்கிலிருந்து Exonerated செய்ய எவ்வித அறிவிப்பும் கொடுக்கவில்லை எனவும், மேலும் 1-ம் எதிர்மனுதாரர் முத்தம்மாளின் வாரிசுகளில் ஒருவராக 4-ம் எதிர்மனுதாரர் ஜெயம்மாள் இறந்த விவரம் மனுதாரருக்கு தெரியவில்லை என்பது உண்மையல்ல. மனுதாரர்களும், எதிர்மனுதாரரும் உறவினர்கள் எனவும், மனு தாக்கல் செய்வதற்கு காலதாமதமாக 1263 நாட்களான நிலையில், 778 நாட்கள் என காலதாமதம் கணக்கீடு செய்துள்ளது சரியானதல்ல. எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுவுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.3** இந்நிலையில், அசல் வழக்கு, 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 2007-ம் ஆண்டிலிருந்து நிலுவையில் உள்ள நிலையில், வழக்கு வாதுரைக்காக போடப்பட்டுள்ள போது, 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டு இ.ம.எண்.1/2022 தாக்கல் செய்யப்பட்டு கடந்த 03.04.2025 அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவாவை திருத்தம் செய்ய இ.ம.எண்.6/2025 தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 1-ம் எதிர்மனுதாரர் முத்தம்மாளின் வாரிசுகளில் ஒருவரான 4-ம்

எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாக எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாணை கொடுக்கப்பட்டதன் அடிப்படையில், 4-ம் எதிர்மனுதாரர் இறந்த தேதியிலிருந்து மனு தாக்கல் செய்த 12.01.2026 நாட்கள் வரை கணக்கீடு செய்து, இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது சரியான ஒன்றாகும்.

**6.4** 1-ம் எதிர்மனுதாரரின் இறப்பு தேதியிலிருந்து 4-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்க்க மனு தாக்கல் செய்யும்நாள் வரை கணக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. 4-ம் எதிர்மனுதாரர் ஜெயம்மாள் கடந்த 27.11.2023 தேதியில் காலம்சென்றுவிட்டதாக குறிப்பிட்டு மனுதாரர்கள் தரப்பில் ஜெயம்மாளின் இறப்பு சான்றிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஜெயம்மாள் கடந்த 27.11.2023 தேதியில் இறந்த தேதியிலிருந்து இம்மனு தாக்கல் செய்த காலம் 12.01.2026 தேதி வரையிலான காலம்வரை 778 நாட்கள் ஆகும். மனுதாரர் 4-ம் எதிர்மனுதாரர் இறந்தபிறகு அவரது வாரிசுகளை தரப்பினராக சேர்க்க 778 நாட்கள் காலதாமதமானது எனவும், மேற்படி காலதாமதம் 4-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் விவரம் தெரியாததால் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மனு தாக்கல் செய்ய முடியவில்லை என கூறியுள்ள காரணம் ஏற்கும்படியாகவும், நம்பும்படியாகவும் உள்ளது. எனவே, 4-ம் எதிர்மனுதாரர் காலம்சென்ற பிறகு அவரது வாரிசுகளை கட்சி சேர்க்க ஏற்பட்ட 778 நாட்கள் காலதாமதம் இந்நீதிமன்றம் மன்னித்து உத்தரவிடப்படுகிறது.

**6.5** மேலும், 3-ம் பிரதிவாதி / எதிர்மனுதாாரர் காலம்சென்றுவிட்ட நிலையில், அவரது வாரிசுகளை கட்சி சேர்க்க மனு செய்யாமல் 3-ம் எதிர்மனுதாரருக்கு எதிராக எவ்வித பரிகாரமும் அசல் வழக்கில் கோரவில்லை என்பதால், 3-ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதியை வழக்கிலிருந்து Exonerated செய்ய உத்தரவிடமாறும், மேற்படி Exonerated என்பதை அசல் வழக்கில் பதிவு செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், எதிர்மனுதாரர் தரப்பில் 3-ம் எதிர்மனுதாரரான நாராயணசாமி மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவான CRPPD No.1353-1355/2012-ன் MP No.1/12 ஆனது 18.02.2013 தேதிய உத்தரவு படி அவசிய தரப்பினர் ஆவார். எனவே, 3-ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதியை வழக்கிலிருந்து Exonerated செய்ய உத்தரவிட இயலாது.

**6.6** மாண்பமை உயர் நீதிமன்ற உத்தரவை காணும்போது, அசல் வழக்கில் 2-ம் பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள நிலையில், 3-ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி அவசிய தரப்பினர் என தீர்மாணிக்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கில் காலம்சென்ற 3-ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக அவரது வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக,**

**இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.13 17:18:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-** - இல்லை -

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-** - இல்லை -

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.13 17:18:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**FAIR ORDER**
**I.A.9/2026 in**
**O.S.No.165/2007**
**13 / 02 / 2026**